செ.கு.எண் : 39 நாள் : 25.1.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 25.1.2012

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், ஏரதிமக்காள்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சுரேஷ் என்பவரின் பத்து மாதக் குழந்தை மதுபாலனுக்கு 21.1.2012 அன்று எம்.சுப்புலாபுரம் கிராமத்திலுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக ஊசி மூலம் மருந்து செலுத்திய போது மயக்கம் அடைந்து, பின்னர் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தான் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காலமான குழந்தை மதுபாலனின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை மதுபாலனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை